**செய்தி வெளியீடு எண்:318** **நாள்:24.06.2021**

**செய்தி வெளியீடு**

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 95ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தனிமனித இடைவெளியைப் பின்பற்றி சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (24.6.2021) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தியாகத் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 24ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்படி, கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (24.6.2021) காலை 9 மணியளவில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மாண்குமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள், தென்சென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு.ஜெ.கருணாநிதி அவர்கள், திரு.த.வேலு அவர்கள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு, தனிமனித இடைவெளியைப் பின்பற்றி மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் கவியரசு கண்ணதாசன் அவர்களின் குடும்பத்தினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**